



நூறுநாள் வேலைத்திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய நிதியைத் தராமல் வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து காட்பாடி தொகுதி கிழக்கு ஒன்றியக் கழகம் சார்பில் பிரமபுரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான பெண்கள் பங்கேற்றனர். ஒன்றியச் செயலாளர் சரவணன், பகுதிச் செயலாளர் ஜி.வன்னியராஜா, ஒன்றியக் குழுத் தலைவர் வேல்முருகன், இளைஞர் அணி முரளி பாஸ்கர் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### 100 நாள் வேலை திட்டப் பணியாளர்கள் உழைப்புக்கான ஊதியத்துக்கு காத்திருக்கின்றனர்!

# தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நிதி வந்து சேரும் வரை தொடர்ந்து போராடுவோம்!

## கோவில்பட்டியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி கண்டன உரை!

**கோவில்பட்டி, மார்ச் 31-**

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ்,100 நாள் வேலை உறுதித் திட்டத்திற்கு விடுவிக்க வேண்டிய ரூ. 4034 கோடி நிதியை வழங்காமல் காலம் தாழ்த்தி வரும் ஒன்றிய அரசைக் கண்டித்து, கோவில்பட்டி மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் நேற்று முன்தினம் (29.03.2025) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில் நடைபெற்றது.**

இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டு, கண்டன உரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற மக்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும். 100 நாள் வேலைத்திட்டத்தின் வழியாக அவர்களுக்கு வரவேண்டிய ஊதியம் சம்பளம் சரியாக வருவதில்லை. அந்த பணத்தை எங்களுக்கு நீங்கள் வழங்க வேண்டும் என்று தொடர்ந்து தமிழ்நாட்டு முதலமைச்சர் பிரதமருக்கு கடிதம் எழுதுகிறார்.

கடந்த மாதம் கூட நானும், தமிழ்நாட்டின் நிதி அமைச்சரும், ஒன்றிய நிதி அமைச்சரை நேரில் சந்தித்து இதற்காக கோரிக்கை வைத்தோம். அதேபோல், ஒன்றிய விவசாய துறை அமைச்சரையும், சந்தித்து எங்களுக்குப் பல மாதங்களாக ஊரக வேலை உறுதி திட்டத்துக்கான தொகை வரவில்லை. அதனால் அந்தத் திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களையும் சம்பளம் தர முடியவில்லை. பெண்களும் ஆண்களும் உழைத்து விட்டு, அந்த உழைப்புக்கான ஊதியம் வராமல் காத்துக் கிடக்கின்றனர் என தெரிவித்தோம். அப்போது இன்னும் சில வாரங்களிலேயே அந்த பணத்தை கொடுத்து விடுவோம் என்று கூறினார். ஆனால், இன்னும் இதுவரை கொடுக்கவில்லை.

**5 மாதங்களாகத் தரவில்லை!**

முதல்வரின் அறிவுறுத்தலின் பேரில், இதை நாடாளுமன்ற கூட்டத்தொடரில் கேள்வி நேரத்தில் தமிழ்நாட்டுக்கு வேலை உறுதி திட்டத்திற்குத் தர வேண்டிய பணம் ஏறத்தாழ ரூ.4034 கோடியை தர வேண்டும். இந்த பணம் 5 மாதங்களாகத் தரப்படவில்லை என்று கேள்வி எழுப்பினோம். அதற்கு சரியான பதில் இல்லை. அதனால் நான் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயே தி.மு.க. எம்.பிக்கள் போராட்டத்தில் இறங்கியது. எங்



களது போராட்டத்திற்குப் பின்னர் எதிர்க்கட்சிகள் அத்தனை பேரும் இணைந்து போராடினர்.

அப்போது, அவை ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒன்றிய அமைச்சர்கள் எங்களை சந்தித்து தயவுசெய்து அவையை நடத்துங்கள் அனுமதிக்க வேண்டும். நிச்சயமாக ஏப்ரல் முதல் வாரத்தில், பணம் வந்துவிடும் என்று முதல்வரிடம் கூறுங்கள் என உறுதி அளித்தனர். ஆனால், அந்த உறுதியை எந்த அளவுக்கு நாம் நம்ப முடியும் என்று தெரியவில்லை. காரணம் அவர்கள் ஒவ்வொரு முறையும் இப்படித்தான் வாக்குறுதி கொடுக்கின்றனர். ஆனால் பணம் வந்து சேர்வதில்லை. அதனால் தான் மக்களோடு சேர்ந்து போராட வேண்டும். மக்களுக்கான நியாயத்துக்காக அவர்களோடு நின்று போராட வேண்டும் என்று இந்த போராட்ட களத்துக்கு அமைச்சர்களை, எம்.பி.க்களை முதலமைச்சர் அனுப்பி வைத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தில் கேட்கும் போது, ஒன்றிய அமைச்சர் ஒருவர் மக்கள் தொகை அதிகம் உள்ள உத்தரப் பிரதேசத்தை விடத் தமிழ்நாட்டுக்குத் தான் அதிக நிதி ஒதுக்கி உள்ளதாகத் தவறான தகவலை தருகிறார்.

100 நாள் வேலை திட்டம் ஒன்றியத்தில் காங்கிரஸ் ஆட்சியிலிருந்தபோது கொண்டுவரப்பட்டது. சாமானிய மக்களுக்கும், கிராமப்புற மக்களுக்கும் 100 நாள் வேலை கிடைக்க வேண்டும் என்று கொண்டு வந்த திட்டம். ஆனால், மோடி ஆட்சிக்கு வந்த பிறகு 100 நாள் வேலை திட்டத்திற்குப் பணத்தை குறைத்துக் கொண்டு வருகின்றனர்.

**பா.ஜ.க.வினரின் வேஷம்!**

எதிர்க்கட்சிகள் ஆட்சியில் இருக்கக்கூடிய மாநிலங்களில் எதுக்கு கேட்டாலும் ஒன்றிய அரசு பணம் கொடுப்பதில்லை. மும்மொழி கொள்கையை ஏற்றுக் கொண்டால் தான் கல்விக்கான நிதி ரூ. 2,000 கோடி வழங்கப்படும் என்கின்றனர். ஆனால் தமிழர்கள் மீதும் தமிழ்நாட்டின் மீதும் அக்கறை உள்ளவர்கள் போல் பா.ஜ.க.வினர் வேஷமிட்டு வருகின்றனர்.

கல்விக்கும் பணம் வரவில்லை, 100 நாள் வேலைத் திட்டத்திற்கு உழைத்த சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் வரவேண்டிய சம்பளப் பணம் தருவதற்கு ஒன்றிய பா.ஜ.க.விற்கு மனம் வரவில்லை.

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 2024-25 பட்ஜெட்டில் ரூ.86,000 கோடி 100 நாள் வேலைத் திட்டத்திற்கு ஒதுக்கினார். இவ்வளவு குறைவாக ஒதுக்கினால், எப்படி போதும் என்று நாங்கள் கேட்டோம். நிதி தேவை அதிகரித்தல், நாங்கள் அதிகரித்து தரக்கூடிய ஒன்று என்று சொன்னார். அதில், ரூ. 9,754 கோடி அதிகரித்துள்ளது. அடுத்த பட்ஜெட்டில் இந்த பணத்தை சேர்த்துத்தான் போடவேண்டும்.

இந்த வருஷம் 2025-26 பட்ஜெட்டில், அதே ரூ.86,000 கோடி ஒதுக்கினார். இந்த லட்சணத்தில்தான் ஒன்றிய அரசாங்கம் செயல்படுகிறது. சம்பளம் கொடுக்க வழியில்லை, 5 மாதங்களாக நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம். பலமுறை ஒன்றிய அமைச்சர்களை சந்தித்து, எங்களுக்குத் தரவேண்டிய நிதியை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

**களத்தில் இறங்கிப் போராடுவோம்!**

தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடர்ந்து பிரதமருக்கு கடிதம் எழுதுகிறார். முதலமைச்சர் ஒவ்வொரு முறையும் பிரதமரை சந்திக்கக் கூடிய நேரத்தில், இந்த கோரிக்கையை வைக்கிறார். இதற்கு மேல் பொறுத்தது போதும், நாம் களத்தில் இறங்கிப் போராடுவோம், நமக்கு நியாயம் கிடைக்கும் வரை போராடுவோம் என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

அதனால், இந்த ரூ.4,000 கோடி வரவில்லை என்றால் நாடாளுமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் போராடும், நமக்கு வரவேண்டிய நிதி வந்து சேரும் வரை தொடர்ந்து போராடுவோம். நம்முடைய உரிமைக்காக, வர வேண்டிய நியமன நிதிக்காக, உழைப்பு வர வேண்டிய சம்பளத்திற்காக, திராவிட முன்னேற்றக் கழகம் என்றென்றும் உங்களோடு நின்று போராடும் என்று பேசினார்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சருமான கீதா ஜீவன் முன்னிலை வகித்தார். தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கோவில்பட்டி நகர் மன்ற தலைவர் கா.கருணாநிதி, ஒன்றிய செயலாளர் வீ.முருகேசன், தலைமைக் கழக பேச்சாளர் சரத் பாலா, மாவட்டத் துணைச் செயலாளர் ஏஞ்சலா மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், வேலை உறுதித் திட்ட பணியாளர்கள் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்திக் கோஷமிட்டனர்.

இவ்வாறு அவர் உரையாற்றினார்.

# 'தி எகானமிஸ்ட் ஏடு' புகழாரம்!

முதல் பக்கத் தொடர்ச்சி...

தென்மாநிலங்கள் பொருளாதார சமூக வளர்ச்சியில் முன்னேறி இருப்பதும் அண்மைக் காலங்களில் இது வெளிப்படையாக வளர்ந்திருப்பதற்குக் காரணமாகும். பெரும்பாலான தென்னிந்திய மக்கள் தற்போது தாங்கள் செலுத்தும் வரியின் பெரும் பகுதி வடமாநிலங்களுக்குச் செலவிடப்படுவதாக உணர்கிறார்கள்.

இதனிடையே, நாடாளுமன்ற மக்களவையில் தங்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் இல்லாததால் ஆட்சி நிர்வாகத்தை மேம்படுத்துவது கடினமாக இருப்பதாக வடமாநிலத்தவர்கள் கூறுகின்றனர். எடுத்துக்காட்டாக, வடமாநிலமான உத்தரப்பிரதேசம் 238 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட இந்தியாவின் பெரிய மாநிலமாகும். இந்த மாநிலத்தில் மக்களவைத் தொகுதி உறுப்பினருக்கான சராசரி மக்கள் தொகை 30 லட்சமாக உள்ளது. தென் மாநிலமான தமிழ்நாட்டில் இது 20 லட்சமாக உள்ளது.

அதிக மக்கள் தொகை கொண்ட வட மாநிலங்களான உத்தரப்பிரதேசம், பீகாரில் கருவுறு விகிதத்தை மாற்று அளவை விடவும் கூடுதலாக, ஒரு பெண்ணுக்கு 2.1 குழந்தைகள் என்ற அளவில் உள்ளது. அதே நேரத்தில், அனைத்துத் தென்மாநிலங்களிலும் கருவுறு விகிதம் இதைவிடக் குறைவாக உள்ளதால், இந்த முரண்பாடு மேலும் மோசமான நிலையை அடைகிறது.

இந்தப் பிரச்சினைக்கு எளிதான தீர்வு இல்லை. முதல் வழி, மக்களவையின் தற்போதைய அளவைப் பேண வேண்டும், ஆனால் புதிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் இடங்களை மறு பங்கீடு செய்ய வேண்டும். அடுத்து, தென் மாநிலங்கள் தற்போதுள்ள இடங்களைப் பெற, மக்களவையின் தற்போதைய எண்ணிக்கையை 848 இடங்களாக அதிகரித்து, மக்கள் தொகை விகிதாச்சார அடிப்படையில் தென்மாநிலங்களுக்கு புதிய இடங்களை ஒதுக்குவது இரண்டாவது வழி என்று அமெரிக்காவின் கார்னகி உலக அமைதிக்கான அறக்கட்டளை (Carnegie Endowment for International Peace) என்ற ஆய்வுக் குழு கணித்துள்ளது.

அதுதான் பிரதமர் மோடியின் விருப்பமாக இருக்கிறது. அதையொட்டித் தான் 2023இல் திறந்துவைத்த புதிய நாடாளுமன்றக் கட்டடம் 888 மக்களவை இருக்கைகளைக் கொண்டுள்ளது. ஆனால், நாடாளுமன்றத்தில் தங்களது பங்கினைக் குறைத்து பா.ஜ.க. அதிகாரத்தை இறுக்கமாக பற்றிக்கொள்ளவே இது வழிவகுக்கும் என்பதால் தென்மாநிலங்கள் இந்தத் தேர்வையும் எதிர்க்கிறார்கள். தமிழ்நாடு தற்போது கொண்டுள்ள அதே அளவிலான விழுக்காடு இடங்களை அளிக்கும் பார்முலாவை மட்டுமே தான் ஏற்றுக்கொள்வேன் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறுகிறார்.

மோடி அவர்கள் மறுசீரமைப்பை நாடாளுமன்றத்தில் தமக்கிருக்கும் எண்ணிக்கையைக் கொண்டு திணிக்கக் கூடும். எதிர்க்கட்சித் தலைவர்களை இதற்கு இணங்கச் செய்ய அவருக்குச் சில வழிகள் உள்ளன. இருப்பினும், இதற்கு அரசியலமைப்பில் திருத்தம் தேவைப்படலாம்.

2024இல் பா.ஜ.க. தனிப்பெரும்பான்மையை இழந்துள்ள நிலையில், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் அவருக்குத் தேவையாக இருக்கும், பாதிக்கும் மேற்பட்ட சட்டமன்றங்களிலும் இதற்கான ஒப்புதலைப் பெற வேண்டியிருக்கும். இப்படி செய்வதன் மூலம் தென் மாநிலங்களில் மேலும் அதிக வாக்குகளைப் பெற வேண்டும் எனக் கருதும் பா.ஜ.க.வின் வாய்ப்புகளையும் அவர் அழிக்க நேரிடும்.

மறுசீரமைப்பைத் தள்ளிப் போடுவது பின்வாங்குவதாகிவிடும். எனினும், அரசியல்ரீதியாக அது சமாளிக்கக் கூடிய ஒன்றுதான். ஏனென்றால் மோடி அவர்கள் தொகுதி மறுசீரமைப்பை முடிக்க இன்னும் சரியான காலக்கெடு எதையும் அறிவிக்கவில்லை. மேலும், தள்ளிப்போட்டால் அது வட மாநிலங்கள் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவும் கூடுதல் காலத்தை வழங்குவதாக அமையும்.

வடமாநிலத்தவர்கள் அதிக அளவில் வேலை தேடி தென்மாநிலங்களுக்கு வரும் போக்கு தொடர்வதால், இந்தியாவுக்குள் நடக்கும் மக்களின் இடப்பெயர்வும் இந்தப் பிரச்சினையைத் தணிக்கலாம். ஆனால், அது மட்டுமே இதற்கான தீர்வாக இருக்க முடியாது என்று அழுத்தமாகச் சொல்கிறார் மு.க. ஸ்டாலின் அவர்கள்.

இந்தப் பிரச்சினை உள்ளூர் அரசியலையும் உள்ளடக்கியது. தமிழ்நாட்டில் 2026 மே மாதத்துக்குள் சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில், ஸ்டாலின் அவர்களை ஆட்சியில் இருந்து அகற்ற பா.ஜ.க.வும் அதன் கூட்டணிக் கட்சிகளும் கனவு காண்கின்றனர். பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை ஊழல் உள்ளிட்ட பிரச்சினைகளில் இருந்து திசை திருப்பவே தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தை ஸ்டாலின் ஊதிப் பெரிதாக்குகிறார் எனக் குற்றம் சாட்டுகிறார்.

ஆனால், ஸ்டாலின் அவர்களைப் பொருத்தவரை இது ஒரு நீண்டகாலப் போராட்டத்தின் ஒரு பகுதியாகும். தமிழ் அடையாளத்தை நசுக்கி, இந்தியத் துணைக்கண்டத்தின் நாகரிகத்தில் தெற்கின் பண்பாடு ஆற்றியுள்ள பங்களிப்பை அழிக்க பா.ஜ.க. முனைகிறது என அவதானிக்கிறார்.

அதனால்தான், தொகுதி மறுசீரமைப்பை எதிர்த்துப் போராடும் அதே நேரத்தில், பழந்தமிழ் வாழிடங்களில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்வதற்கும் பெரும் நிதியை ஒதுக்கி வருகிறார். மேலும், வட இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானில் உள்ள வெண்கலக்கால இடங்களில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளின் எழுத்து முறையை அறிந்துகொள்ள உதவுவோர்க்கு ஒரு மில்லியன் டாலர் பரிசுத்தொகையை அறிவித்துள்ளார். இந்தியாவின் முன்னோர்களாக இந்து தேசியவாதிகள் கருதும் ஆரியர்களுக்கு வெகுகாலம் முன்பே, அங்கு தென்னிந்தியாவைச் சேர்ந்த திராவிடர்கள் இருந்தனர் என இதன் முடிவுகள் மெய்ப்பிக்கும் என மு.க. ஸ்டாலின் நம்புகிறார்.

பா.ஜ.க. ஆதரவாளர்கள் அவரின் இந்த முயற்சிகளை எள்ளி நகையாடலாம். ஆனால், தமிழ் அடையாளம் மிக வீரியமிக்க அரசியல் ஆற்றல் ஆகும். அது இதற்கு முன்பும் மைய அரசின் அத்துமீறலை, குறிப்பாக 1965 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் மூலம் தண்டித்துள்ளது. இந்தப் போராட்டங்களையெல்லாம் வழிநடத்த உதவிய தனது தந்தையின் வழித்தடத்தில் மட்டும் முதல்வர் மு.க.ஸ்டாலின் நடைபோடவில்லை; வரலாற்றில் தனக்கான இடத்தை அவர் உறுதிப்படுத்துகிறார்.

இவ்வாறு 'தி எகானமிஸ்ட்' ஏடு குறிப்பிட்டுள்ளது.



இராமேஸ்வரம் நகரில், 29.3.2025 ந்தேதி, இராமேஸ்வரம் நகர் கழகம் சார்பில், இராமேஸ்வரம். தமிழ்நாடு 2025,26 ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை விளக்க மற்றும் கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் 72வது பிறந்தநாள் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு பல்வேறு நலத்திட்டங்களை அள்ளித்தந்த தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு நன்றி தெரிவித்து மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சாமுத்துராமலிங்கம் தலைமை தாங்கினார். இராமேஸ்வரம் நகர் கழக செயலாளர் கேஇநாசர்கான் வரவேற்புரையாற்றினார். இக்கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் சட்ட துறை இணை செயலாளர் தலைமை கழக பேச்சாளர் சூரியாவெற்றிகொண்டான் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

### திருச்சி தெற்கு மாவட்டத்தில்

# இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பங்கேற்பு!

*திருச்சி, மார்ச். 31-*

*திருச்சி தெற்கு மாவட்ட திமுக கழகத்தின் சார்பாக புனித ரமலான் மாதத்தை முன்னிட்டு "இப்தார் நோன்பு" திறக்கும் நிகழ்வு திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் பள்ளிக் கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களின் ஏற்பாட்டிலும் தலைமையிலும், முப்தி முஹம்மது, ரூஹுல் ஹக் ஹஜ்ரத் தலைவர் திருச்சி மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை முன்னிலையில் நடைபெற்றது.*

*இந்நிகழ்வில் உளமா பெருமக்கள் ஜமத்தார்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு நோன்பு திறந்தனர். அதனைத் தொடர்ந்து அருகில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடத்தில் தொழுகையையும் நடத்தி முடித்து, புனித பெருநாளுக்கான வாழ்த்துக்களையும் இஸ்லாமிய பெருமக்களுக்கு அமைச்சர் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.*

*இந்நிகழ்வில் கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் அப்துல்சமத், மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் மற்றும் கழக நிர்வாகிகள் இஸ்லாமிய பெருமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

*அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசுகையில்...*

*இறைவனிடம் கையேந்துங்கள்*

*அவர் இல்லை என்று சொல்லுவதில்லை என்ற பாடலை பாடி...*

*இந்த பாடலை பாடிய அதே குரல்தான் ஓடி வருகிறார் உதயசூரியன் பாடல் பாடியவர் என மேடையில் அமைச்சர் பாடல் பாடினார்.*

*மந்திரம், தந்திரத்திற்கு ஆளாகாத மார்க்கத்தை கொண்டவர்கள்தான் இஸ்லாமியர்கள் என சொன்னவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.*

*பாரம்பரியத்தை விடாமல் பின்தொடர்பவர்கள் இஸ்லாமியர்கள் என சொன்னவர் பேரறிஞர் அண்ணா வக்பு வாரிய மசோதாவை 115 முறை திருத்தியுள்ளது மத்திய அரசு. இதில் ஏன் மத்திய அரசு இவ்வளவு அக்கரை காட்டுகிறது? அதில் இவர்களுக்கு என்ன கவலை!*

*அதில் அக்கறை காட்ட. தேவையில்லை என சட்ட மன்றத்தில் தனி தீர்மானம் கொண்டு வந்தவர் முதலமைச்சர்.*

*இறைவனிடம் துவா கேட்கும் உங்களிடம் நாங்கள் துவா கேட்கிறோம். உங்களின் தூய்மையான வாக்குகளை கேட்கிறோம், முதலமைச்சரின் நலமுடன் வாழ வேண்டும் என உங்களிடம் துவா கேட்கிறோம் என்றார்.*